**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**

**சி.சி.எண். 57/2022**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.சௌந்தர்பாண்டி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | வயது | 49 |
| த.பெ.(அ)க.பெ. | முனிசாமி | தொழில் | பேக்கரி கடை |
| ஊர்/பணிபுரியுமிடம் | லாஸ்பேட்டை | சமயம் | |
| வட்டம் | பாண்டிசேரி | சாதி | |
| மாவட்டம் | பாண்டிசேரி | | |

**முதல் விசாரணை : எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.**

நான் பாண்டிசேரி லாஸ்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் பேக்கரி கடை வைத்துள்ளேன். எனது சொந்த ஊர் திருப்பத்தூர் வட்டம் கவுண்டப்பனூர் ஆகும். அ.சா.1 கனகா எனது மாமனார் பெரியதம்பியின் அக்கா. எதிரி தங்கவேல் பெரியதம்பியின் சம்மந்தி. நான் கடந்த 15.01.2020 அன்று தை மாதம் 1ம் தேதி பொங்கல் பண்டிகைக்காக என் மாமனார் வீட்டிற்கு வந்திருந்தேன். அன்றைய தினம் காலை 9.30 மணி முதல் 10 மணி இருக்கும். எனது மாமனார் பெரியதம்பி பொங்கல் வைப்பதற்காக தயார் செய்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி தங்கவேல் இருசக்கர வாகனத்தில வந்து இறங்கினார். வந்த உடன் எனது மாமனார் பெரியதம்பியை பார்த்து தேவிடியா பையா என்று ஆபாசமாக திட்டினார். அதற்கு என் மாமனார் ஏன் பொங்கல் நாளில் வந்து எதற்கு இப்படி தவறாக பேசுகிறாய் எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று சமாதானம் சொன்னார். ஆனால் எதிரி தங்கவேல் பெரியதம்பியை பார்த்து உனது மகன் பிரச்சனை செய்துவிட்டு வந்துள்ளான், நீ அதெல்லாம் கேட்கமாட்டாயா என்று சொல்லிக்கொண்டே எனது மாமனாரை கையால் மாறி மாறி தாக்கினார். பின்னர் ஒரு கட்டை எடுத்துக்கொண்டு எனது மாமனாரை அடிக்க வந்தார். அப்போது அ.சா.1 கனகா எதிரி தங்கவேலுவை பார்த்து எனது தம்பியை அடிக்க வேண்டாம் என்று சொல்லி தடுக்க வந்தார். அப்போது எதிரி அ.சா.1 கனகாவை கீழே தள்ளி தடியால் இடுப்பின் மீது ஓங்கி அடித்துவிட்டார். அப்போது எதிரி தங்கவேலுக்கு பிறகு சிறிது நேரம் கழித்து சிவன் என்பவர் சம்பவயிடத்திற்கு வந்தார். அவர் எனது மாமனார் வீட்டின் அருகே இருந்த கடப்பாறையை எடுத்து எனது மாமனாரை குத்த வந்தார். கீழே இருந்த அ.சா.1 மீண்டும் மேற்படி சிவனை தடுப்பதற்காக சென்ற போது சிவன் அ.சா.1யை பிடித்து மீண்டும் கீழே தள்ளிவிட்டார். அதன்பிறகு அ.சா.1 ஆல் கீழே இருந்து எழுந்திருக்க முடியவில்லை. ஆம்புலன்ஸ் வரவழைத்து அ.சா.1 கனகாவை திருப்பதூர் அரசு

மருத்துவமனை கொண்டுபோய் சேர்த்தோம். பின்னர் அ.சா.1 யை மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

சாட்சியின் கையொப்பம்

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.எண். 57/2022</u>**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.சௌந்தர்பாண்டி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனகா | வயது | 76 |
| த.பெ.(அ)க.பெ. | காளியப்பன் | தொழில் | இல்லதரசி |
| ஊர்/பணிபுரியுமிடம் | காக்கங்கரை | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**<u>முதல் விசாரணை :</u>  எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.**

நான் காக்கங்கரையில் வசித்து வருகிறேன். நான் இல்லதரசியாக உள்ளேன். வழக்கின் எதிரி தங்கவேலு எனது உடன் பிறந்த தம்பியான பெரியதம்பியின் சம்மந்தி ஆவார். எனது தம்பி மகனுக்கு எதிரியின் மகளை திருமணம் செய்துள்ளோம். சுமார் 2 வருடத்திற்கு முன்பு தைமாதம் முதல் நாள் எனது தம்பி வீட்டின் முன்பாக பொங்கல் வைப்பதற்காக அடுப்பு மூட்டி பானை வைத்துக்கொண்டிருந்தார். அப்போது வழக்கின் எதிரி தங்கவேலு இருசக்கர வாகனத்தில் வந்து வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி எனது தம்பியை இருகைகளாலும் மாறி மாறி தாக்கினார். உடனே பக்கத்தில் வீட்டிருந்து ஒருவர் வந்து எதிரயை விலக்கிவிட்டார். அவர் சென்றதும் எதிரி வீட்டின் அருகே உரல் பக்கமாக இருந்த ஒரு பெரிய தடியை எடுத்து எனது தம்பியை அடிக்க சென்றார். உடனே நான் எதிரியை பார்த்து வேண்டாம் சாமி அடிக்க வேண்டாம் என்று கெஞ்சினேன். அதற்கு என்னை கழுத்தை பிடித்து கீழே தள்ளி இடுப்பின் மீது தடியால் அடித்து விட்டார். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. எனக்கு வலி அதிகமாக இருந்ததால் ஆம்புலன்ஸ் வரவழைத்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த என்னிடம் போலீசார் வந்து விசாரணை செய்து வாக்குமூலம் கேட்டு எழுதிக்கொண்டார்கள். அதில் எனது இடது கை பெருவிரல் ரேகையை பதித்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் நான் 2 மாதங்கள் மருத்துவமனையில் உள்நோயளாளியாக சிகிச்சையில் இருந்தேன். எதிரி என்னை தாக்க பயன்படுத்திய தடியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் தடியால்தான் எதிரி என்னையை

தாக்கினார். **தடி அ.சா.பொ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்